உ




இணுவையூர் மகா வித்வான்

ஸ்ரீ பொன் அம்பிகைபாகர்

அவர்களின் பேரனும்

இளைப்பாறிய ஆசிரியருமான


# சின்னத்தம்பி அம்பிகைபாகன்

அவர்களின்

# நினைவு மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆசிரியர்

# சின்னத்தம்பி அம்பிகைபாகன்

அவர்கள்

தோற்றம் :
05 – 12 – 1907

மறைவு :
16 – 02 – 1994

திதி வெண்பா

அறிவுடையான் நல்லாற்றல் தானுடையான் தனக்கோர்
நெறியுடையான் அம்பிகை பாகனவன் — சிறந்த
ஸ்ரீமுகத்து மாசிசேர் சஷ்டித்திதி புதனிலே
இறைவனடி சேர்ந்தான் இனிது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணுவில்
## ஆசிரியர் சி. அம்பிகைபாகன் அவர்களின்
# வாழ்க்கை வரலாறு

மாசிலா சைவ வேளாண்குலத் திலகர் ஸ்ரீமான் ஆ. சின்னத் தம்பி ஆசிரியர் அவர்களுக்கும் மனையாள் ஆச்சிக்குட்டி அம்மை யாருக்கும் இரண்டாவது மைந்தனாக ஸ்ரீமான் அம்பிகைபாகன் 05-12-1907இல் உதித்தார். இவருக்கு மூன்றாம் வயதில் வித்தியாரம் பம் எனது தந்தையார் காலஞ்சென்ற ஸ்ரீமான் அ. க. வைத்திய லிங்கப்பிள்ளை அவர்கள் செய்து வைத்தார். எனது பேரனார் மகா வித்வான் பொ. அம்பிகைபாக உபாத்தியார் அவர்களால் 1864ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட சைவப்பிரகாச வித்தியாசாலை யில் அம்பிகைபாகன் மூன்றாம் வகுப்பு வரை கற்று வந்தார். ஆங்கிலம் கற்பதற்காக உரும்பிராய் இந்துக் கல்லூரியில் அவரது தந்தையாரால் சேர்க்கப்பட்டு அங்கு கல்வி கற்று வந்தார். பின் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் சேர்ந்து கேம்பிரிட்ஸ் சீனியர் வரை கற்றார்.

திரு. அம்பிகைபாகன் அவர்கள் சித்திரம் தீட்டுவதில் அபார திறமை உள்ளவராக விளங்கினார். தெய்வத் திருவுருவங்களை அழகிய ஓவியமாக வரைவதில் வல்லவர். திருக்கேதீஸ்வரம், இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார் போன்ற ஆலயங்களிலும் மற்றும் பாடசாலைகள், வசந்தமண்டபங்கள், திரை அரங்குகளை யும் இக்கலைஞரது ஓவியங்கள் அலங்கரிக்கின்றன.

கொழும்பிலிருந்து வெளிவந்த ''உதயம்'' இலக்கிய சஞ்சிகை யின் ஆண்டு மலர் அட்டையை அலங்கரிக்கும் ''அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்'' என்னும் கம்பராமாயணத் தில் வரும் மெய்க் காதலின் தத்துவத்தை விளக்கும் காட்சியை திரு. அம்பிகைபாகன் அவர்கள் அழகிய மூவர்ண ஓவியமாக வரைந்து இலக்கிய ரசிகர்களின் பாராட்டுக்களைப் பெற்றவர். அத்துடன் ''உதயம்'' ஆலோசனை மன்றத் தலைவரும், கைத் தொழில் வீடமைப்பு சமூகசேவை முன்னாள் அமைச்சருமாகிய அமரர் சேர். கந்தையா வைத்தியநாதன் அவர்களும் இக்கலைஞ ரைப் பாராட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவரது சகோதரர் திரு. ஆறுமுகதாசன் சிறந்த சங்கீத ஆசிரியரும் பண்பாளருமாவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது சிறிய தந்தையார் மும்மொழி வல்லுநர் காலஞ்சென்ற ஸ்ரீமான் அ. க. இளையதம்பி அவர்களின் புத்திரி இராசம்மாவை இவருக்குத் திருமணம் செய்து வைத்தார். நற்றவப் பயனால் ஸ்ரீகாந்தன், ஸ்ரீதரன் ஆகிய ஆண் குழந்தைகளைப் பெற்று பெரு மகிழ்ச்சி அடைந்தார். சீனியர் பரீட்சையில் சித்தியடைந்த இவர் தான் முன்னர் கல்வி கற்ற உரும்பிராய் இந்துக் கல்லூரியில் சித்திர ஆசிரியராக நியமனம் பெற்றார்.

பிள்ளைகள் இருவரும் ஆரம்பக் கல்வியை இணுவில் சைவப் பிரகாச வித்தியாசாலையில் கற்றனர். பின்னர் உரும்பிராய் இந்துக் கல்லூரியிலும் கொக்குவில் இந்துக் கல்லூரியிலும் சேர்ந்து அவர்கள் இருவரும் திறமையாகக் கற்றுத் தேர்ச்சி பெற்று பட வரைஞர்களாக கொழும்பு கட்டடத் திணைக்களத்தில் கடமையாற்றினார்கள். பிள்ளைகள் இருவரும் அரசாங்க உத்தியோகத்தில் இருப்பதைப் பார்த்து மகிழ்ந்தார். மூத்த மகனாகிய ஸ்ரீகாந்தனுக்கு தற்போது இராமநாதன் கல்லூரியில் கடமையாற்றும் கலைமாணிப் பட்டம் பெற்ற நேசராணியைத் திருமணம் செய்து வைத்து ஸ்ரீவாணி, ஸ்ரீரஞ்சினி ஆகியோரைப் பேரப்பிள்ளைகளாகப் பெற்றார். இளைய மகன் ஸ்ரீதரனுக்கு இராசாவின் திருமகள் பரமேஸ்வரியை திருமணம் செய்து வைத்து ஸ்ரீஅரவிந்தன், ஸ்ரீஅசோகன் ஆகியோரைப் பேரப்பிள்ளைகளாகப் பெற்று மகிழ்ந்தார்.

உரும்பிராய் இந்துக் கல்லூரியில் சித்திர ஆசிரியராகக் கடமையாற்றிய அம்பிகைபாகன் அவர்கள் கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு மாற்றலாகிச் சென்று அங்கு சிறிது காலம் கடமையாற்றிய பின்னர் ஓய்வு பெற்றார். இணுவில் சைவப்பிரகாச வித்தியாசாலை மகா வித்தியாலயமாவதற்கு அரும்பாடு பட்டார். முப்பது ஆண்டுகளாக இயங்கி வந்த இந்து மகா சபைக்குக் காரியதரிசியாக இருந்து வந்தார். அக்காலத்தில் சேர். பொன். இராமநாதன் அவர்களும் அவரது மருமகன் ஸ்ரீமான் சு. நடேசபிள்ளை அவர்களும் பிற கல்விமான்களும் சமுகம் கொடுத்து சபையின் நிகழ்ச்சிகளைப் பார்த்து மகிழ்ந்தார்கள்.

திரு. அம்பிகைபாகன் அவர்கள் தனது ஒப்பற்ற மனைவியையும், இளைய மகன் ஸ்ரீதரனையும் இழந்து ஆற்றொணாத் துயரில் வருந்தினார். பின்னர் மூத்த மகனினதும், மருமக்களினதும், பேரப்பிள்ளைகளினதும், சகோதரரான திரு. ஆறுமுகதாசருடைய மகள் திருமதி தேவாம்பிகை இராமநாதனின் ஆதரவிலும் இருந்து வரும் வேளையில் நிகழும் ஸ்ரீமுக வருடம் மாசி மாதம் 4ஆம் நாள் (16-02-94) புதன்கிழமை 10-30 மணியளவில் இறைவனடி சேர்ந்தார்.

மைத்துனரும், இளைப்பாறிய அதிபருமான
மூதறிஞர் ஸ்ரீமான் வை. கதிர்காமநாதன் அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# திருமுறைத் திரட்டு

## தேவாரம்

திருச்சிற்றம்பலம்

ஈன்றாளு மாயெனக் கெந்தையு மாயுடன்
தோன்றினராய்
மூன்றா யுலகம் படைத்துகந்தான்
மனத் துள்ளிருக்க
ஏன்றா னிமையவர்க் கன்பன்
றிருப்பா திருப்புலியூர்த்
தோன்றாத் துணையா யிருந்தனன்
றன்னடி யோங்களுக்கே.

## திருவாசகம்

பால்நினைந் தூட்டும் தாயினுஞ் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை யுருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறம் திரிந்த
செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

## திருவிசைப்பா

நீறணி பவளக் குன்றமே நின்ற
நெற்றிக்கண் உடையதோர் நெருப்பே
வேறணி புவன போகமே யோக
வெள்ளமே மேருவில் வீரா
ஆறணி சடையெம் அற்புதக் கூத்தா
அம் பொன்செய் அம்பலத்தரசே
ஏறணி கொடியெம் ஈசனே உன்னைத்
தொண்டனேன் இசையுமா றிசையே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

மன்னுகதில்லை வளர்கநம் பக்தர்கள்
வஞ்சகர் போயகலப்
பொன்னின்செய் மண்டபத்துள்ளே புகுந்து
புவனியெல்லாம் விளங்க
அன்னநடை மடவாள் உமைகோன்
அடியோமுக்(கு) அருள்புரிந்து
பின்னைப் பிறவி அறுக்க நெறிதந்த
பித்தர்க்குப் பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

சடை மருங்கி விளம் பிறையுந்
தனிவிழிக்குந் திருநுதலு
மிடமருங்கி லுமையாளு மெம்
மருங்கும் பூதகணம்
புடை நெருங்கும் பெருமையுமுன்
கண்டரசன் போற்றிசைப்ப
விடை மருவும் பெருமானும் விறல்
வேந்தற்கருள் கொடுத்தான்

## திருப்புகழ்

இருவினையின் மதிம யங்கித் திரியாதே
எழுநரகி லுழலு நெஞ்சுற் றலையாதே
பரமகுரு அருள்நி னைந்திட் டுணர்வாலே
பரவுதரி சனையை யென்றெற் கருள்வாயே
தெரிதமிழை யுதவு சங்கப் புலவோனே
சிவனருளு முருக செம்பொற் கழலோனே
கருணைநெறி புரியு மன்பர்க் கெளியோனே
கனகசபை மருவு கந்தப் பெருமாளே.

திருச்சிற்றம்பலம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி

பொன்னம்பலம் அம்பிகைபாகர்

- வைத்திலிங்கம்
- இளையதம்பி
- சபாபதி
- ஆச்சிக்குட்டி + சின்னத்தம்பி
  - ஆறுமுகதாசன் + தையல்நாயகி
    - பாலசுப்பிரமணியம்
    - சிவதாசன்
    - தேவாம்பிகை
  - பராசக்தி
  - செல்வம்
  - வாலாம்பிகை
  - அம்பிகைபாகன் + இராசம்மா
    - ஸ்ரீகாந்தன் + நேசராணி
      - ஸ்ரீவாணி
      - ஸ்ரீரஞ்சினி
    - ஸ்ரீதரன் + பரமேஸ்வரி
      - ஸ்ரீ அரவிந்தன்
      - ஸ்ரீ அசோகன்
- லட்சுமிப்பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




எமது குடும்பத்தலைவர் திரு. அம்பிகைபாகன் அவர்களின் இறுதிக் கிரியைகளில் வந்து உதவிய உற்றார், உறவினர், அயலவர், நண்பர்கள், பழைய மாணவர்கள் ஆகியோருக்கும், அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், சபிண்டிக் கிரியைகளிற் கலந்து ஆன்ம சாந்தியின் பொருட்டுப் பிரார்த்தித்தவர்களுக்கும், இன்னும் பல்வேறு வழிகளில் உதவி புரிந்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றி.

இங்ஙனம்

இணுவில்.
*3-3-94*

மகன், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

அம்மா, இணுவில் - மருதனார்மடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org